பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 03 | வியாழக்கிழமை | 15.02.2024 | கதிர் 100

# பொதுத்துறையின் திறனை அதிகரிக்க இந்தியாவுடன் கூட்டு வேலைத் திட்டம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், இலங்கையின் பொதுத்துறையின் திறனை அதிகரிக்க இந்திய--இலங்கை கூட்டாண்மை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அண்மைய இந்தியப் பயணத்தின்போது, இரு நாட்டு மக்களின் நலனுக்காக இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் புதிய துறைகள் மூலம் வலுப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். குறிப்பாக இரு நாட்டு மக்களிடையேயும் தொடர்புகளை மேம்படுத்துவது குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது, இந்தியா சிவில் சேவைகளின் திறனை ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவரான சிவஞானம் சிறீதரன் நேற்று கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்து கட்சியின் தேசிய மாநாடு தொடர்பில் தகவல் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சார்ளஸ் நிர்மலநாதனும் அவருடனிருந்தார்.

கட்சியின் செயலாளர் பதவி தொடர்பில் எழுந்த பிரச்சினைகள் குறித்தும் அப்போது சீறிதரன் விளக்கிச் சொன்னார். உட்கட்சி ஜனநாயகத்தை நிலைநாட்டும் வகையில் தேசிய மாநாட்டை உடனடியாக நடத்துமாறு சம்பந்தன் அப்போது சம்பந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

சம்பந்தன் வயது மூப்பின் காரணமாக அதிகம் நடமாட ☞ 2

## கட்டுத் துப்பாக்கி தர்மபுரத்தில் மீட்பு



உள்ளூரில் செய்யப்பட்ட கட்டுத் துப்பாக்கிகள் இரண்டைத் தர்மபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ☞ 2

## பொருளாதார மாற்றத்திற்குத் தேவையான உலகுக்கு உகந்த கல்வி முறை அவசியம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டைப் பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கு, உலகத்திற்கு உகந்த வகையிலான புதிய கல்வி முறைமை அவசியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க சுட்டிக் காட்டினார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் நேற்று பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான இலவச பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

எனது வீட்டிற்கு அருகில் ஐந்து பாடசாலைகள் உள்ளன. நான் கற்ற றோயல் கல்லூரி மற்றும் தேர்ஸ்டன் கல்லூரி, மகளிர் கல்லூரி, மகாநாம கல்லூரி மற்றும் புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி என்பனவே அவை. அதனால் எனக்கு கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்த முடிந்துள்ளது. ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இப்பாடசாலைகளின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தினோம்.

2022 இல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால், கல்வித் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளும் சரிவைச் சந்தித்தன. பாடசாலை பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்கமுடியவில்லை. அந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க எந்த தலைவரும் முன்வரவில்லை. அப்போது, சவாலை ஏற்று, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தேன்

இந்த பொருளாதார வேலைத்திட்டத்தினால் இன்று நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற்று வருகின்றது. அதன்படி, ☞ 8

## சர்வதேச பல்கலைக்கழகங்கள் மூன்று இலங்கையில் விரைவில் உருவாகும்

3சர்வதேசபல்கலைக் கழகங்களை இலங்கையில் உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இவற்றில் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு மே மாதத்திற்குள் மூன்றாவது பல்கலைக்கழகழகத்துக்கான பணிகளும் தொடங்கப்படும் என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்

ஜனாதிபதி ☞ 2

## உலகிற்குப் பொருத்தமான கல்விக்காக ஜனாதிபதி ரணில் கடும் அர்ப்பணிப்பு

### பாராட்டுகிறார் கல்வி அமைச்சர்

உலகிற்குப் பொருத்தமான வகையில் கல்வி முறையை மாற்றியமைக்க ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். இந்த அனைத்து வேலைத்திட்டத்துடனும் உலகை வெல்லக்கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் நேற்று பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான இலவச பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் ☞ 8

## மலையகக் கட்சிகள் சஜித்துடன் சமூக ஒப்பந்தத்தில் கைச்சாத்து

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே சமூக உடன்படிக்கை ஒன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தேசிய தொழிலாளர் முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணி தலைவர் இராதாகிருஷ்ணன், கேகாலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா, கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நுவரெலியா மாவட்ட ஐக்கிய மக்கள் ☞ 2

## ஜனாதிபதி நிதியத்துக்கு புதிய இணையத் தளம்

ஜனாதிபதி நிதியத்தின் புதிய இணையத்தளம் (httpt//www.presidentsfund.gov.lk) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

இதன் மூலம், ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான புதிய தகவல்களை மும்மொழிகளிலும் பொதுமக்கள் பெறமுடிவதுடன், மருத்துவ உதவி பெறுவது தொடர்பான விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்யும் வசதியும் உள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார, ஜனாதிபதி நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் கயான் மொரலியகே மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.டி.எம்.பொதேஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதிய தேர்தல் முறையை கண்டறியும் தேடல் தீவிரம்

### பல நாடுகளின் மாதிரிகளும் ஆராய்வு

பல்வேறு நாடுகளின் தேர்தல் முறைமைகளை ஆராய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் முறைமைகள் தொடர்பான மறுசீரமைப்பு பரிந்துரைகளை முன்வைப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா, சிங்கப்பூர், பிரித்தானியா, கனடா, சுவிட்சர்லாந்து, எஸ்டோனியா ஆகிய நாடுகளின் தேர்தல் முறைமைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக அந்த தேர்தல் முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் தேர்தல் முறைமைகளை மாற்றுவதற்கு மேற்கொள்ளக்கூடிய முன்மாதிரி தொடர்பில் தெளிவொன்றைப் பெற்றுக்கொள்வதே மேற்படி ஆய்வின் நோக்கமாகவுள்ளது.

இதேநேரம், தேர்தல் ☞ 2

## எந்தக் கூட்டுக்கும் நான் தலைவியில்லை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவத்தினை பொறுப்பேற்பதற்கு இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இருந்து வெளியாகும் வாராந்த தமிழ் பத்திரிகையொன்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவத்தினை பொறுப்பேற்பதற்கு சந்திரிகா தீர்மானித்துள்ளதாக செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நான் கூட்டணியொன்றுக்கு தலைமை தாங்கப்போகின்றேன் என்றும், அதற்குப் பல்வேறு தலைவர்கள் இணையவுள் ☞ 2

## இலங்கையின் ஜனநாயக ஆட்சி குறித்து அமெரிக்காவின் சமந்தா பவர் கரிசனை

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தம், ஜனநாயக ஆட்சி மற்றும் இணைய சுதந்திரம் ஆகியன தொடர்பில் 'யுஎஸ் எய்ட்' என்கிற அமெரிக்க அரச உதவி அமைப்பின் தலைவர் சமந்தா பவர் கரிசனை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நிகழ்நிலையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து யு.எஸ்.எயிட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கின்றது. இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனநாயக விழுமியங்களை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை ஆராய்ந்ததோடு, இதில் சட்டமியற்றும் செயல்முறை மற்றும் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முடியாத நிலையில் இருப்பதால் அவர் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்வதில்லை. எனவேதான் சிறீதரன் அவரைச்சந்தித்துகட்சியின் தேசிய மாநாட்டை பெப்ரவரி 19 அன்றுநடத்துவதுஎன்றுதாம்முடிவு செய்திருப்பதுகுறித்ததகவல்களைத் தெரிவித்தார்.

செயலாளர் தெரிவு தொடர்பில் ஆளுக்கு ஒருவருடம் என்கிற இணக்கம் எட்டப்பட்டுள்ளமை குறித்தும் தெரிவித்த சிறீதரன், இருப்பினும் தேசிய மாநாட்டுக்கு முன்னதாகக்கூட்டப்படவுள்ளபொதுக் குழுக் கூட்டத்தில் அது தொடர்பில் குழப்பங்கள் மீண்டும் எழக்கூடிய சாத்தியங்கள் இருப்பது குறித்தும் சம்பந்தனுக்கு எடுத்துக்கூறினார்.

அப்படியொரு நிலை வருமானால், மீண்டும் தேர்தலை நடத்தி அன்றைய தினமே தெரிவு மற்றும் மாநாடு இரண்டையும் முடித்துவிடுமாறு சம்பந்தன் அப்போது அறிவுறுத்தினார் என்று சிறீதரன் செய்தியாளர்கள் சிலரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனவரி27திருகோணமலையில் நடந்தநிர்வாகத்தெரிவுகளில்பொதுச் செயலாளர்தெரிவைஏற்றுக்கொள்ள முடியாது என்று பொதுச் சபையில் இருந்த சிலர் ஏற்படுத்திய குழப்பத்தால்தான் மறுநாள் ஜனவரி 28 நடத்தப்படவேண்டிய தேசிய மாநாடு திடீரென ஒத்தி வைக்கப்பட்டது. இப்போது அதே பொதுக் குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களையே மீண்டும்அறிவிக்க இருக்கிறார்கள். அதனால் பொதுக் குழு அதனை ஏற்றுக்கொள்ளுமா, குழப்பங்கள் எழுமா என்கிற சந்தேகங்கள் இருக்கின்றன.

ஆளுக்கு ஒரு வருட ஏற்பாட்டுக்கு அமைவாக, இப்போது திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் குகதாசன்தான் கட்சியின் செயலாளராகப் பதவியேற்கப் போகின்றார். ஆனால்ஒருவருடத்தில் அவர் பதவி விலகவேண்டும் என்று கட்சித் தலைவராலும் இந்த விடயத்தில்சமரசம்பேசியமருத்துவர் சத்தியலிங்கம்போன்றவர்களாலும் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார். வவுனியாவில் வைத்து அவரும் அதற்கு இணங்கியிருக்கிறார்.

கட்சியின் யாப்புப்படி குகதாசன் பதவி விலகினால், அடுத்த பொதுச் சபைக்கூட்டத்தில்செயலாளர்தெரிவு செய்யப்படும்வரை கட்சியின் இரு உப செயலாளர்களில் ஒருவரே பதில் செயலாளராகக் கடமையாற்ற முடியும். அதனால் குகதாசன் பதவி விலகியதும் பொதுச் சபையைக் கூட்டாமலேயே தான் பதில் செயலாளராகச் செயற்படத்தக்க வகையில் தன்னை உப செயலாளராக நியமிக்கவேண்டும் என்று செயலாளர் பதவியை எதிர்பார்த்திருக்கும்மட்டக்களப்பைச் சேர்ந்த சிறீநேசன் வலியுறுத்தி அதற்கான இணக்கத்தை கட்சித் தலைவரிடம் இருந்து பெற்றிருக்கிறார்.

ஜனவரி 27 பொதுக் குழுக் கூட்டத்தில் உப செயலாளர்களில் ஒருவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அன்றைய மத்திய செயற்குழு சிறீநேசனை உப செயலாளராக நியமிக்கும்எந்தத்தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பொதுச் சபையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை ஆதரிப்பதாகத்தான் பெரும்பான்மையானஉறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். அதனால் இந்தப் பொதுச் சபையில் உப செயலாளர் பதவியை மாற்றுவது தொடர்பில் எப்படியும் பிரச்சினை கிளம்பும்.

அப்படிக் கிளம்பினால் செயலாளர் பதவி உட்பட கட்சியின் பொறுப்புக்களுக்குமீண்டும்தேர்தல் நடத்துவதுஎன்கிறஏற்பாட்டுகள்தான் நடக்கின்றன என்பது சம்பந்தர் - சிறீதரன் சந்திப்பில் இருந்து தெரியவந்திருக்கின்றது. சட்டச் சிக்கல்கள் இல்லாத அளவிற்கு அது அவ்வளவு இலகுவானதா என்பது இன்னும்நான்குநாட்களில் தெரிந்துவிடும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொதுத்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்ப ஒரு பெரும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் அரச துறையின் திறனை கட்டியெழுப்பும் இந்திய-இலங்கை கூட்டாண்மையானது இலங்கையில்அரசநிறுவனங்களின் கட்டமைப்பைமிகவும்புதுமையான முறையிலும் செயற்திறனுடனும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வாய்ப்பளிக்கும்.

இந்ததிட்டத்தைசெயற்படுத்துவது தொடர்பான உயர்மட்ட பேச்சுவார்த்தைக்கான இலங்கை அரசாங்கத்தின்அழைப்பின்போரில் இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும்பிரதமர்தினேஷ்குணவர்தன ஆகியோருடன்கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையின் அரச சேவையில் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும்முறைகுறித்துநீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல்களின் பலனாக, இலங்கையில் இருந்து உயர்மட்டக் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று, பொருத்தமான திறன் மேம்பாட்டு ஒத்துழைப்புத்திட்டத்தைத்தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் மேலதிக கலந்துரையாடல்களை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கதலைமையில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இலங்கை முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உள்ளிட்ட 14 அரச அதிகாரிகளைக் கொண்டஉயர்மட்டக்குழுபெப்ரவரி 12முதல்17வரை இந்தியாநல்லாட்சி தேசிய மையத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். இந்திய அரசினால் இதற்குத் தேவையானஅனைத்துவசதிகளும் அளிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கையில் 12 அரச நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் டிஜிட்டல் கொள்முதல் உள்ளிட்ட அரசின் பிரதான சேவைகளுக்காக டிஜிட்டல்மயமாக்கலை செயற்படுத்தல், புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அரச ஊழியர்களின் திறன் மேம்பாடு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், முதலீட்டு வசதிகள் அளித்தல் மற்றும் உணவுகளின் நடுநிலையானவிலைப்பொறிமுறை ஆகிய பிரிவுகளுடன் தொடர்புள்ள நிறுவனங்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

அரச சேவையின் மேம்பாட்டிற்கானஅண்மையமுன்முயற்சிகள் மற்றும்பொருளாதார நலன் குறித்த இந்திய அரசு நிறுவனங்களால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட கொள்கை, நிறுவன மற்றும் செயல்பாட்டு மேம்பாடுகளின் மூலம் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் அறிந்து கொள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு நடவடிக்கை எடுக்கும்.

நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மையைஅடைவதற்கான நடவடிக்கைஎடுக்கப்பட்டிருப்பதோடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் அரச நிறுவனங்களின் திறனை அதிகரிக்கவும், சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் நிறுவக்கூடிய நிறுவன ஒத்துழைப்புகளை அடையாளம்காணவும்பிரதிநிதிகள் குழு எதிர்பார்க்கிறது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழு கலந்துரையாடல்களிலும்பங்கேற்க இருப்பதோடு, அவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர், ஆளணி தொடர்பான இராஜாங்க அமைச்சர், மக்கள் குறைகேள் அமைச்சர், வெளிவிவகாரஇராஜாங்கஅமைச்சர் மற்றும் பிரதமரின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர் ஆகியோருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவுள்ளனர்.

## கட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமந்தனாறுகல்லாறுபகுதியில்வீடு ஒன்றில்மறைத்துவைக்கப்பட்டிருந்த இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்கு இந்தத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிகளுடன் கட்டுத் துவக்கு குழாய்கள் 3 கம்பி மற்றும் ஈயக்குண்டுகள் 12 யானை வெடி 3 வெடிமருந்து என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

இவற்றை வைத்திருந்தவர் என்கிற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்று அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து சுதந்திரம் ஆகியன தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரஜைகளின் அடிப்படை உரிமைகளுக்கான வலுவான அமெரிக்க உறுதிப்பாடு வலியுறுத்தப்பட்டதோடு, சுதந்திரம் மற்றும்டிஜிட்டல்பொருளாதாரத்தின் மேம்பாட்டில் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் சாத்தியமான தாக்கம் தொடர்பாக கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்கள் மற்றும் நாட்டின் மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் யு.எஸ். எயிட் முக்கிய பங்கை வழங்குவதோடு, பொருளாதார நெருக்கடிகளை முகங்கொடுப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தொடர்ச்சியான உறுதிப்பாடும்வெளிப்படுத்தப்பட்டது என்றுள்ளது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமைதொடர்பில்சமூகநீதிக்கான மக்கள் செயற்றிட்டம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களைச்செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்றார்.

## எந்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நான் அவ்வாறு எந்தவொருகூட்டணிக்கும்தலைமை வகிப்பதற்கு இன்னமும்உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கவில்லை - என்றுள்ளது.

## மலையகக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் உதயகுமார் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில்சஜித்பிரேமதாஸவுடன் ஒப்பமிட்டனர்.

இதன்போது, இலங்கைக்குப் பெரும் வளமாகக் காணப்படும் மலையக மற்றும் தென் பகுதி தோட்ட சமூகத்தினரின் வாழ்க்கை, வாழ்வாதாரம், ஜீவனோபாயம் உள்ளிட்ட சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, மலையகம் மற்றும்தென்பகுதியபெருந்தோட்டத் துறையில் உள்ள சமூகத்துடன் இன்று ஒரு முக்கியமான சமூக உடன்படிக்கையை மேற்கொள்ள முடிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் இதற்கென தனியான ஜனாதிபதி செயலகம் உ--ஷருவாக்கப்பட்டு, மலையக மற்றும் தென் பகுதித் தோட்ட சமூகத்தினர் எதிர்நோக்கும் பொருளாதார, சமூக ரீதியான அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் உட்கட்டமைப்புத் துறையில்உள்ளபிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதும் இந்த உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்றுசஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலட்சக்கணக்கான மலையக மற்றும் தென் பகுதி பெருந்தோட்டசமூகங்கள்நாட்டின்உயிர்நாடியாக இருந்து வருவதால், அவர்களைஎப்போதும்கூலித்தொழிலாளிகளாகவே வைத்திருக்காது, அவர்களுக்கு பயிர்ச்செய்கை நில உரிமை மற்றும் வீட்டுரிமைகளை வழங்குவதோடு, பெருந்தோட்டத் துறையில் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர்களாகும் வாய்ப்பும் இதன் மூலம் உருகும். இதுவரை இரண்டாம், மூன்றாம் வகுப்பினர் எனும் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த இந்த சமூகத்தை, வார்த்தைகளோடு மட்டுப்பட்ட கோஷங்களை கடந்து, ஒரு குறித்த காலக்கெடுவுக்குஉட்பட்டவகையில், வலுவூட்ட, தெளிவான சமூக இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம்.

ஐக்கியமக்கள்சக்தியின்ஆட்சிநிறுவப்பட்ட முதல்நாளிலிருந்தே, இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் கலந்துரையாடுவதற்குப் பதிலாக, இந்தச் சமூக ஒப்பந்தத்தை நடைமுறை ரீதியாக யதார்த்தமாக்குவதற்கு நான் நடவடிக்கைஎடுப்பேன். இந்நாட்டின் ஜனநாயக வரலாற்றில் இது ஒரு முக்கியமான தருணம் என்று கூறலாம். அரசியல் சூழ்ச்சிகளால் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்படும் மலையக மற்றும் தென்பகுதி பெருந்தோட்டசமூகத்திற்கு, பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான பயணத்தை மேற்கொள்கின்றோம்.

மலையக, தென் பகுதி பெருந்தோட்ட சமூகத்தின் உண்மையானபிரதிநிதிகளுடன்இன்றைய தினம்ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டது. தமது சொந்த பதவி சலுகைகளை விடுத்து, தமது சமூகத்தைப் பாதுகாத்து அபிவிருத்தியின் விடியலை கொண்டு வருமாறு அவர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர், இவ்வாறானவர்களுடன்இப்படியான சமூக ஒப்பந்தை எட்டியதில் மகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியில் சர்வதேச அனுபவமுள்ள நிபுணர்களின் அவதானத்திற்குப் பின்னர் அரச பல்கலைக்கழகங்கள் மூலம் பல்துறைப்பட்டங்களைவழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கண்டியில்இந்தியதொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட உள்ளது. ஏனைய இரண்டு பல்கலைக்கழகங்களும் அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தை மையமாக கொண்டு அவற்றின் இரண்டு கிளைகள் திறக்கப்படவுள்ளதுடன் அவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தயாராக உள்ளோம்.

விஜயதாச ராஜபக்ஷ குழுவின் அறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் குழு அறிக்கை என்பவற்றை இணைத்து புதிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவைத் தொடங்குவதற்கான தொடக்க கட்ட கலந்துரையாடல்கள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. குழுவின் தலைவர் பதவிக்கு, முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவனை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான சட்டக் கட்டமைப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டு, சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரச பல்கலைக்கழகங்களில் பல்துறை பட்டங்களை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கைக்கு வருகைதருமாறு ஆஸ்திரேலிய உயர்கல்வி அமைச்சருக்கு ஆஸ்திரேலிய தூதரகத்தின் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மெல்போர்ன், சிட்னி பல்கலைக்கழகம் உட்பட 10 பல்கலைக்கழகளுடன் தொடர்புள்ள நிபுணத்துவ அறிவுள்ள வேந்தர்களும் இலங்கைக்கு வருகை தர உள்ளனர். எமது கல்வி நிலைமையை ஆய்வுசெய்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார்உயர்கல்வித்துறையை முறைப்படுத்த வேண்டும். ஆனால் கல்வித்துறையை விற்பனை செய்வதற்கு நாம் தயாரில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பெரும்போக அறுவடை மும்முரம் கிண்ணியா விவசாயிகள் ஈடுபாடு





(ஹஸ்பர் ஏ.எச்)

பெரும்போக வேளாண்மை செய்கையின் அறுவடை தற்போது இடம் பெற்று வருகிறது.

கிண்ணியா பகுதியின் குறிஞ்சாக்கேணி கமநல சேவை பிரிவின் சூரங்கல் விவசாய நிலப் பகுதியில் நெற் செய்கை அறுவடை இடம் பெற்ற போதிலும் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் நெல்லுக்கான விலை இன்மை என பல காரணங்களால் பாரிய நஷ்டங்களை எதிர் கொள்வதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தப் பகுதியில் சுமார் 1200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட நெல் அறுவடை இடம்பெறுகிறது. அண்மையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக தங்களது வயல் நிலங்கள் அழிவடைந்ததால் ஓர் ஏக்கருக்கு எட்டு தொடக்கம் பத்து மூடைகளுக்கும் குறைவாகவே விளைச்சல் கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இயந்திரம் மூலமான வெட்டுக்கூலி, பசளை, கிருமி நாசினி என பல செலவுகள் போக எஞ்சியிருப்பது ஒன்றுமே இல்லை எனவும் தெரிவிக்கின்றனர். பசளைக்கான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால் வங்கியில் சென்று பார்த்தால் எதுவுமே இல்லை உரிய நேரத்துக்கு பசளை தரமான கிருமி நாசினிகளை அரசாங்கம் பெற்றுத் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

## ஆசிரியர் இடமாற்றத்தில் பாராபட்சம் வடக்கு திணைக்களம் மீது குற்றச்சாட்டு

### இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் கண்டனம

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளி மாவட்ட சேவையை வழங்காத ஆசிரியர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களையெல்லாம் கண்டும் காணாமலும் வடக்கு மாகாண கல்வி அதிகாரிகள், தற்காலிகமாக ஆண் ஆசிரியர்களுக்கு 48 வயதும் பெண் ஆசிரியர்களுக்கு 43 வயதும் என்று பாகுபாட்டுடன், தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு எதிராக தீர்மானங்களைக் காலத்துக்குக் காலம் எடுத்து ஆசிரியர் இடமாற்றத்தில் பாராபட்சம் காட்டி வருகின்றனர்.

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் (2007ஃ20) பிரகாரம் இது தவறாகும்.

ஆண் ஆசிரியர்ளுக்கு ஒரு கொள்கை பெண் ஆசிரியர்களுக்கு வேறு ஒரு கொள்கை என இலங்கையில் வடக்கு மாகாணத்தில் மட்டும்தான் உண்டு.


இந்த விடயத்தில் கல்வி அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். 55 (தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை - 3.4.(ஞ) ஏனைய விடயங்கள்) வயதுக்குள் வெளிமாவட்ட சேவையைக் குறைந்த பட்சம் 2 வருடங்களேனும் வழக்காத ஆசிரியர் பலர் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றும் போது, குறிப்பிட்ட ஆசிரியர்கள் மட்டும் 2, 3, 4, 5, 6, 7, 8 வருடாங்கள் அதிகஷ்ட, கஷ்ட விருப்பம் அற்ற பிரதேச பாடசாலைகளில் சேவையாற்றுவது எங்களுடைய கல்வியில் பேண்தகுக் கொள்கையின்மையைக் காட்டுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் எங்களுடைய தொழிற்சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். கல்வி அதிகாரிகள் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

தவறும் தறுவாயில் மனவுளைச்சலுக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர் குழாம் வீதிக்கு இறங்க நேரிடலாம். (05)

## போதைப் பொருளுக்கு பயன்பாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்






'போதைப் பொருள் பெருந்தீமையிலிருந்து எம்மையும், எமது சந்ததியினரையும் பாதுகாப போம்' எனும் தொனிப்பொருளில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் மத்திய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் யாழ். மாவட்ட சர்வமத பேரவை தலைவர் சிவஸ்ரீ கிருபானந்த குருக்கள், செயலாளர் அருப்பணி இ.ராஜ்குமார், யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீவிமல தேரர், மௌலவி வி.ஏ.எஸ்.சுபியான் உள்ளிட்ட சில மத தலைவர்கள் கலந்துகொண்டனர .(05)

## பெண்களின் பெரும்பான்மை பங்களிப்புடன் எதிர்காலத்தில் பலமான ஆட்சி உருவாகும்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய உறுதி







(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த நாட்டிலுள்ள பெண்கள் பொருளாதார ரீதியில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை, எமது பெண்கள் மாநாட்டிற்கு திரண்டு வருவதிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு அநுராதபுரத்தில் இடம்பெற்ற பெண்கள் மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எதிர்காலத்தில் பெண்களின் பாரிய பங்களிப் போடு பலமான அரசாங்கமொன்றை தேசிய ஐக்கிய முன்னணி அமைக்கும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. அரசியல் ரீதியில் இதுவரை காலமும் கடைப்பிடித்த தவறான கொள்கையின் பிரதிபலனை இன்று ஒட்டு மொத்த நாடும் எதிர் கொள்ளுகின்றது. பொருளாதார ரீதியில் பெண்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்ப தலைவிகளாக இருந்து கொண்டு தமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவது மிகவும் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அரச தலைவர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் குடும்ப பெண்கள் நுண்கடன் திட்டமென்ற கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக கின்றனர் என்று தெரிவித்தார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தியா காய்களை சரியாக நகர்த்துகிறது

கடந்த ஒரு சில வாரங்களாக இந்தியாவுடனான இலங்கையின் இரு தரப்பு திட்டங்கள் குறித்த அறிவிப்புக்கள் ஆளும் தரப்பால் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. ஆளும் தரப்பின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் நடத்தும் செய்தியாளர்கள் சந்திப்புகளில் எல்லாம் பெரும்பாலும் தவறாமல் இந்தியாவுடனான இருதரப்புத் திட்டங்கள் குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன.

தென்னிந்தியாவுடன் தரைவழித் தொடர்பை ஏற்படுத்தப் போகின்றோம், அது தொடர்பான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டனஎன்றுஆஸ்திரேலியாவிற்குச்சென்றிருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதேநேரம் நாகப்பட்டினத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் நேரடியாக கடலடி எண்ணெய்க் குழாய்களைப் பொ–ருத்தும் திட்டம் தொடர்பில் சக்தி வளத்துறை அமைச்சர் காஞ்சன அறிவித்திருந்தார்.

இலங்கைக்கு வரும் இந்தியச் சுற்றுலாவிகள் தங்கள் கியூ.ஆர். கொடுப்பனவு முறையை இலங்கையிலும் அப்படியே பின்பற்றக்கூடியதான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்கிற அறிவிப்புஇருநாள்களினன்முன்னர்வெளியிடப்பட்டது. அதற்கான ஒப்பந்தத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நிகழ்நிலையில் கலந்துகொள்ள, இரு நாடுகளும் கையெழுத்திட்டன. நேற்று இலங்கையின் அரச நிர்வாகத் துறையை (பொதுத்துறை) மேம்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் பொதுத்துறை வினைத்திறனுள்ளதாக்குவதற்கு, இந்தியா தனது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தவுள்ள சில திட்டங்களைப் பின்பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம்போதாதுஎன்றுஇந்தியாவில்சர்ச்சைக்குரிய இராமர்கோயிலைஇந்தியப்பிரதமர்மோடிதிறந்துவைத்தமையை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டுகின்றார். இந்த இராமர் கோயில் முஸ்லிம்களின் மசூதியை ஒரே நாளில் இடித்துத் தள்ளி அதன் மீது கட்டப்பட்டது. அது இந்திய ஜனநாயகத்தையேகேலிக்கூத்தாக்கியபாரதீயஜனதாக்கட்சியின் அரசியல் என அங்கு கடும் விமர்சனம் உண்டு. அத்தகைய இராமர் கோயிலைத் திறந்து வைத்தமைக்காகத்தான் ரணில் மோடியை வாழ்த்தினார்.

ரணிலுக்கு இப்படி ஏன் திடீரென இந்தியாவின் மீது பற்றும் பாசமும் ஏற்பட்டன என்பதுதான் இப்போது கேள்வி. சில வாரங்களுக்கு முன்னர் வரைக்கும் அவரது பேச்சுக்கள் நடத்தைகள்எல்லாம்சீனாவைத்திருப்திப்படுத்தும்வகையில்தான் அமைந்திருந்தன. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை அவர் கடுமையாக விமர்சித்து வந்தார். சீனாவுக்கு நெருக்கமான மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார். சீனாவைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி இருந்த ரணில் ஏன் இப்போது திடீரென இந்தியா, இந்தியா என்று கதறுகின்றார்?

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இணங்கப்பட்டவற்றின் அடிப்படையிலேயே இந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் ஆளும் தரப்பின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. ரணில் 2023 ஆடி மாதம் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். இப்போது 6 மாதங்கள் கடந்த பின்னர், அப்போது இணங்கப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஆளும் தரப்பு மும்முரமாக இருக்கின்றது. இந்தத் திடீர் மாற்றம் ஏன்?

இந்தியா ஜேவிபி தலைவர் அநுரகுமாரவை அழைத்துப் பேசிய பின்னணியையும் ஆளும் தரப்பின் மாற்றங்களையும் சேர்த்தே பார்க்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில் ஜேவிபி இந்தியாவில் இருந்த தருணத்தில்தான் ஆளும் தரப்பின் இந்திய சுருதி மாறத் தொடங்கியது. இலங்கையில் தன்னை முற்றிலும் வெறுத்தொதுக்கும் அரசியல் கொள்கையை உடைய கட்சியொன்று ஆட்சிக்கு வந்தால், அதனோடும் இணைந்து செயற்படுத் தயாராகத்தான் இருப்பதாக, அதாவது ரணிலை ஆட்சியில்தொடர்ந்துஇருத்திவைத்திருக்கவேண்டியஅவசியமோ அவசரமோ தமக்கு இல்லை என்பதை வெளிப்படுத்துவதாக புதுடில்லி எடுத்திருக்கக்கூடிய நகர்வுகளே ரணிலை இந்தியா பக்கம் திருப்பியிருக்கின்றது என்று எண்ணுவதற்கான அனைத்துச் சாத்தியங்களும் இருக்கின்றன.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கொழும்பு தொடர்ந்து தனது அரசியல் சுழற்சியை நடத்திக்கொண்டே இருக்கும். அதுதான் அதன் கொள்கை. எனினும்தன்நலன்சார்ந்துஅதுஇதில்எந்தவொருபக்கத்திற்கும் அதிகம் சாய்ந்துவிடாமல் இருப்பதை ஒவ்வொரு தரப்பும் உறுதிப்படுத்துவதில் கவனமாக இருக்கும். அந்த வகையில் இந்தியா சரியாகவே காய்களை நகர்த்தி இலங்கையைத் தன் தடத்திற்குத் திருப்பியிருப்பதாகவேபடுகிறது.



# லஞ்சம், ஊழலை ஒழிப்போம்

**வேதாந்தி**

கையூட்டு என்னும் கள்ளப்பணப் பரிமா–ற்றம் இப்போது அதிகரித்து வருகிறது. லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் என்று சட்டம் கூறினாலும், லஞ்சப்பேய் ஒழிக்க முடியாமல் நாட்டிலே நடமாடிக்கொண்டுதான் இருக்கிறது. இது கௌரவமான ஊழலாகிவிட்டது.

ஒரு செயலை நிறைவேற்றுவதற்கு சட்டவிரே–ாதமாக வாங்கும் அல்லது கொடுக்கும் வெகுமதி லஞ்சம் ஆகும். அந்த வெகுமதி பொருளாகவோ, பணமாகவோ இருக்கலாம். அதிகாரத்தில் இருப்பவர்களின் மோசடியான, நேர்மையற்ற செயலே இதன் வளர்ச்சிக்குக் காரணமாகும். அன்பளிப்பு என்ற பெயரில் அழைத்தாலும் கை–யூட்டு அருவருப்பானதுதான்.

அரசுத் துறைகளிலே இத்தகைய லஞ்சம் அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு செயலுக்கு உரிய தொகையைக் கட்டணமாக வசூலிப்பதில் நியாயம் இருக்கிறது. அது அரசின் நர்வாக நடை–டமுறைக்கு வேண்டிய நிதிவருவாயைப் பெருக்க வழி வகுக்கிறது. அதைக்காட்டிலும் கூடுதலாக ஒரு தொகையைத் தருமாறு வற்புறுத்துவது சரியாக–ாது. இப்படிக் கணக்கில் வராமல் பெறும் லஞ்சம் கண்டிக்கத்தக்கது. இது இழிசெயலாகும்.

ஒரு காலத்தில் சட்ட விரோதமாக செய்யப்படும் செயல்களுக்காகத்தான் லஞ்சம் வாங்கப்பட்டது. அப்படி நுழைந்த லஞ்சம், இன்று சட்ட விரோதமற்ற, நேர்மையான எல்லாச் செயல்களையும் ஆக்கிரம–ித்துவிட்டது. வழக்கமாக அரச அலுவலகங்களில் நடக்கவேண்டிய செயல்களே இப்போது லஞ்சம் கொடுத்தால்தான் நடக்கும் என்றாகிவிட்டது.

பணி நியமனம் வழுங்குவதற்கு லஞ்சம், பணி இடமாற்றம் செய்வதற்கு லஞ்சம், பணி ஒப்பந்தம் பெறுவதற்கு லஞ்சம், ஒப்பந்தத் தொகையைப் பெ–றுவதற்கு லஞ்சம் – இப்படி எல்லாத் துறைகளிலும் இப்போது லஞ்சம் மலிந்துவிட்டது என்பதுதான் கசப்பான உண்மை.

இப்படி, நியாயமான, சாதாரண செயல்களில் கூட லஞ்சம் நடமாடுவது கவலையைத் தருகி–றது. அப்படியென்றால் அசாதாரண செயல்களில் லஞ்சம் இருப்பது கவலை தரவில்லையா என்றால் அது அதனைவிடப் பெருங்கவலையளிக்கிறது. எல்லா நிலைகளிலும் லஞ்சம் ஒழிய வேண்டும் என்பதே இங்கு எல்லோருக்கும் ஆசையாகும்.

அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்தான் லஞ்சம் வளர்வதற்குக் காரணமாக உள்ளனர் என்பது மக்களின் பொதுவான எண்ணமாக உள்ளது. ஆழ்ந்து பார்த்தால் பொதுமக்களுக்கும் அதில் தொடர்பிருப்பது புரியும். 'ஒரு காரிய–த்தை உடனடியாக முடித்துவிட வேண்டும்' என்ற எண்ணம் இன்று நம் எல்லோரிடத்தும் உள்ளது.

குறிப்பாக, வசதி உள்ளவர்களிடம் அந்த எண்ணம் அதிகமாக உள்ளது."அதிகாரிகளிடம் 'எவ்வளவு வேண்டும், என்ன வேண்டும், தருக–ிறோம் விரைவில் முடித்துத்தர வேண்டும்' "என்று பேரம் பேசும் மக்களை இப்போது நிறையவே காண முடிகிறது. பேசுவதோடு மட்டுமல்லாது, அள்ளிக்கொடுத்து காரியத்தைச் சாதித்தும் கொள்கின்றனர். இப்படிப்பட்ட லஞ்சமயமான



சூழலில், வசதியற்ற ஏழைகள் என்ன செய்வார்கள்?

பாவபபட்ட அவர்கள் தங்களால் இயன்றதைக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகி–றார்கள். இல்லையென்றால் காரியம் முடியாமல் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

'அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அரசு ஊழியர்கள் என்று எல்லோரும் வெட்கப்படாமல் லஞ்சம் வாங்குகிறார்கள். அதிலும் அரசுத்துறை அதிகாரிகளின் போக்கு அளவிட முடியாததாக இருக்கிறது' என்பது பொதுமக்களின் ஆவேசம். கடைநிலை ஊழியர், உயர் அதிகாரி என்று இவர்களில் பேதமில்லை. குறைந்த சம்பளம் வாங்குவோர், நிறைந்த சம்பளம் வாங்குவோர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்கள்.

அவரவர் பெறுகின்ற ஊதியத்திற்கேற்ப லஞ்ச–த்தொகை மாறுபடுகிறது. இதுதான் வேறுபாடே தவிர, லஞ்சம் வாங்குவதில் எந்த வேறுபாடும் இல்லை. லஞ்சம் வாங்குவதில் விருப்பம் இல்ல–ாத நேர்மையான அதிகாரிகளைக்கூட லஞ்சம் வாங்கவைத்து காரியம் முடிக்க நினைக்கும் விபரீதமான ஆட்களும் இருக்கிறார்கள்.

அரைகுறையாகப் பணிமுடித்த ஒப்பந்தக்காரர், பணி முடித்தது போல பணம் பெறுவதற்கு, மாநகர–ாட்சி ஆணையாளர் ஒருவருக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி மேற்கொண்ட செய்தி அண்மையில் வெளியாகி பரபரப்பை உண்டாக்கியது.

'வாங்குகிற ஊதியம் போதவில்லை. இதனால் லஞ்சம் வாங்கும் சூழல் உருவாகிவிடுகிறது' என்பதெல்லாம் வெற்றுப் பேச்சு. வாங்குகிற ஊதியத்திற்குள் வாழ்க்கை நடத்தப் பழகிக்கொ–ள்வதுதான் புத்திசாலித்தனம்.

இதைவிட்டுவிட்டு அடுத்தவன் பணத்தைப் பிடுங்க நினைப்பது திருட்டுத்தனம். அடுத்தவர் போல வாழவேண்டும் என்று எழுகின்ற ஆசை பலருக்கும் இருக்கிறது. இதற்காக நேர்வழியை நாடாமல் குறுக்குவழியை நாடுவதுதான் லஞ்சம் வளர வழிவகுக்கிறது.

எங்கும் எதிலும் லஞ்சம் வியாபித்திருப்பதால், லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றமில்லை என்பது போன்ற ஒரு எண்ணம் இன்றைய இளை–ஞர்கள் மத்தியில் வளர்ந்துள்ளது. அதனைப் பே–ாக்கும் வகையில், கையூட்டு என்பது கள்ளப்பணப் பரிமாற்றம். பிறர் பணத்தை அபகரிக்கும் செயல். அது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது என்பதைப் புரியவைக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாது, லஞ்சமில்லா நடை–டமுறையை உருவாக்க வேண்டும். அதுதான் எதிர்கால இந்தியாவைச் சீரமைக்கும் வழியாகும்

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை பிரதேச செயலக உள்ளக கிரிக்கெட் சுற்றுப் போட்டி







(எஸ்.அஷ்ரப்கான்)

சம்மாந்துறை பிரதேச செயலக நலன்புரி அமைப்பால் வருடாந்தம் நடத்தப்படும் உள்ளக கிரிக்கெட் சுற்றுப்போட்டி உதவி பிரதேச செயலாளர் யு.எல்.அஸ்லம் தலைமையில் செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

உத்தியோகத்தர்களுக்கிடையே உடல் ஆரோக்கியத்தையும், மன வலிமையையும், திறன் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடைபெறும் இச்சுற்றுபோட்டியில் இம்முறை 8 அணிகள் கலந்து கொண்டதுடன் அணிக்கு 7 பேர் கொண்ட 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக இது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தச் சுற்றுப் போட்டிக்கு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மத் ஹனீபா மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி. சாஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் நிர்வாக கிளையும் வெளிக்கள கிளையும் மோதின.

இதில் நிர்வாக கிளை 43 ஓட்டங்களால் வெற்றி பெற்று இந்த ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலக உள்ளக கிரிக்கெட் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (05)

# நாடகமும் அரங்கியலும் பாட முழுநாள் பயிற்சி

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், நாளை ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள் .(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் எதிர்த்துக் கவனவீர்ப்புப் போராட்டம்






(பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களம் அண்மையில் வெளியிட்ட ஆசிரியர் இடமாற்ற பட்டியலை இரத்து செய்யக் கோரி கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலய ஆசிரியர்கள் குழுவினர் அம்பாறை மாவட்ட செயலகம் முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை புதன்கிழமை மேற்கொண்டிருந்தனர். இதன் போது அம்பாறை கச்சேசரியில் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு கலந்து கொள்வதற்கு வருகை தந்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோரை ஆசிரியர்கள் குழுவினர் சந்தித்து தங்களுடைய பிரச்சினைகளை எடுத்து கூறி மகஜர் ஒன்றினையும் வழங்கி வைத்தனர்.

மேலும் குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய விடயத்தை எடுத்து சென்று நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருவதாக உறுதி அளித்தனர். (05)



## உலகிற்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்ததேசியவேலைத்திட்டத்திற்கு இணையாக 9 மாகாணங்களின் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலைச் சீருடை மற்றும் பாடப்புத்தங்கள் இன்று வழங்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டதன்பின்னர் கல்வித்துறையின்நான்குபிரிவுகளை ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வந்து மனித வளத்தை முகாமைத்துவம் செய்துமாணவர்களுக்குமுறையான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தினார்.

இன்றுவழங்கப்படும்பாடசாலை சீருடையில் 80% சீன அரசின் அன்பளிப்பாகும். எஞ்சிய 20% சதவீதம்இலங்கைஅரசின்செலவில் பெற்றுகொடுக்கப்பட்டது.

இந்திய கடன் உதவியில் கிடைத்தகடதாசியைகொண்டுபாடப் புத்தகங்கள்அச்சிடப்பட்டன.அதனால் உரிய தினத்தில் பாடப்புத்தங்களை வழங்க முடிந்துள்ளது. அரச அச்சீட்டு பணிகளில் இலாபம் ஈட்டவும் முடிந்துள்ளது. அனைத்து பாடசாலைகளினதும் மாணவர்களுக்கும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்க அரசு 19 பில்லியன்ரூபாயைச்செலவிடுகிறது.

கொரோனாமற்றும்பொருளாதார நெருக்கடியின் காரணமாக தாமதமாகிவரும் சாதாரண தர பரீட்சைகளை 2025 ஆம் ஆண்டிலிருந்துஉரியகாலப்பகுதியில் நடத்துவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல் கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதி பெரும் பங்களிப்பு வழங்குகிறார். உலகிற்குப்பொருத்தமானவகையில் கல்வி முறையை மாற்றியமைக்க அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். இந்த அனைத்து வேலைத்திட்டத்துடனும் உலகை வெல்லக்கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும் - என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்களைஉரியநேரத்தில் வழங்க அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அதற்காக 14 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை செலவிடப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக நாட்டில்புதியகல்விமுறையொன்றை உருவாக்க வேண்டும். உலகிற்கு பொருத்தமானதொழில்படையினை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கு கல்வி முறையை உலகிற்குபொருத்தமானவகையில் மாற்றியமைக்க வேண்டும். அதன் மூலம் உலகிற்கு தேவையான தொழில் படையினை உருவாக்க முடியும்.

அதனூடாக சர்வதேச சந்தையுடன்போட்டியிடும்வாய்ப்பு எமக்கு கிடைக்கும். பரீட்சைகளின் சுமைகளை குறைத்து ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களை கல்வி முறையில் உள்வாங்கிதொழில்முறைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக தொழில், தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கவும் எதிர்பார்க்கிறோம்.

நாம் எவரும் 2022 இல் இருந்த நிலைக்குச் செல்வதை விரும்பவில்லை. எரிவாயு, எரிபொருள் உணவு வரிசைகள் அற்ற சமூகமே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். எனவே அவ்வாறானயுகத்திற்குள்மீண்டும் நாடு செல்லாமலிருக்க வலுவான பொருளாதாரத்தை நாம் உருவாக்குவோம். வலுவானபொருளாதாரம் கொண்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தினைநாம்ஆரம்பித்துள்ளோம். என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மு.கா. கட்சியை பலப்படுத்தி ஜனரஞ்சகமாக்கி சமூகம் நன்மை பெறும் விடயங்களில் ஈடுபடுக

## எம்.எஸ்.உதுமாலெப்பை கோரிக்கை



(எஸ்.அஷ்ரப்கான்)

கட்சியைப் பலப்படுத்தி ஜனரஞ்சகமாக்கி நமது சமூகமும், நாமும் நன்மை பெறும் விடயங்களில் நாம் ஈடுபட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

சாய்ந்தமருது 21 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள 05,07,08,09 ஆம் கிராம சேவகர் பிரிவுகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கிளைகள் புனரமைப்புக்கூட்டம் சாய்ந்தமருது 21 ஆம் வட்டார வேட்பாளர் பாமி மன்சூர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இங்கு கலந்து கொண்டு உரையாற்றிய எம்.எஸ்.உதுமாலெப்பை தொடர்ந்தும் அங்கு உரையாற்றும்போது -

முஸ்லிம் கட்சிகளை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்காக கட்சியையும், கட்சிக் கட்டமைப்புக்களையும் சீர்குலைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

கட்சி விசுவாசம் என்பது மிக முக்கியமானதாகும். அது மனச் சாட்சியுடன் தொடர்பான விடயமாகும்.நாம் எப்போதும் கட்சிக்கும்,தலைமைக்கும்,நமது மக்களுக்கும் விசுவாசமாக இருந்து செயல்பட வேண்டும். தேர்தல் நடந்தாலும் நடக்காவிட்டாலும் மக்களுடன் இணைந்து நமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் நமது கட்சி வளர்ச்சி அடையும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அம்பாறை மாவட்டத்தில் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2 ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சராகக் கட்சியின் தலைவரும் பதவியில் இருந்து பாரிய அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

நல்லாட்சி அரசாங்க ஆட்சிக் காலம் நிறைவடைந்து ஜனாதிபதி தேர்தல் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத்தேர்தல் அதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அரசாங்கத்திக்கும் எதிராக அம்பாறை மாவட்ட மக்களால் அட்டாளைச்சேனையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக கட்சியின் தலைவரால் விசேட குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர்கள் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள எல்லா முஸ்லிம் பிரதேசங்களுக்கும் சென்றோம். மக்களுக்கும் நமது கட்சிக்கும் இடைவெளி இருந்தன.

தேர்தல் காலங்களில் மட்டும் கட்சியின் மத்திய குழுவினரையும்,செயற்பாட்டாளர்களையும்,மக்களையும் சந்தித்து தேர்தல் முடிந்தவுடன் மத்திய குழுக்களுக்கு தெரியாமல் சிறு சிறு குழுக்களும் இயங்கி எமது கட்சியின் மத்திய குழுக்களை சீரழித்துள்ளமையால் நாங்கள் இனிமேல் கட்சி செயற்பாடுகளில் இருந்து ஒதுங்குவதாகவும் எமது குழுவிடம் கட்சி செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் அமைந்துள்ள மத்திய குழுக்கள்,கட்சி முக்கியஸ்தர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கட்சியின் தலைவரிடம் அறிக்கையை சமர்பித்தோம். இதன் பிறகு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் (எம்.பி) யால் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய கட்சிக் கிளைகள் புனரமைப்புக் குழு நியமிக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பிரதேசங்களில் இதுவரை கருத்து முரன்பாடுகளுடன் செயற்பட்ட கட்சி முக்கியஸ்தர்கள்,

அமைப்பாளர்கள், மத்திய குழுத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களின் ஒத்துழைப்புடனும் அம்பாறை மாவட்டத்தில் கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் அட்டாளைச்சேனையில் இருந்து கட்சிக் கிளைகள் புணரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து தற்போது அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள எல்லா முஸ்லிம் பிரதேசங்களிலும் கட்சி கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கட்சியின் விசுவாசத்தன்மையும் கட்சியின் கட்டமைப்பையும் பாதுகாக்க வேண்டும். தேர்தல் ஒன்று நடைபெறும் வரை நாம் எல்லோரும் உயிரோடு இருப்போம் என்பதை எப்படி நம்புவது? சில நிமிடங்களில் நமது நாட்டில் சுனாமி அலை வந்து 13000 மக்கள் மரணித்தார்கள்.

இன்னும் சில நிமிடங்கள் சுனாமி அலைகள் நீடித்திருந்தால் அம்பாறை மாவட்டமே பாதிக்கப்பட்டிருக்கும் என்பது தான் யதார்த்தம் ஆகும்.எனவே கட்சி,-தலைமை ,நமது மக்கள் மீது எப்போதும் விசுவாசமாக செயல்பட்டால் இறைவன் நாடுவது கிடைக்கும் என்ற என்னெத்துடன் எல்லோரும் செயற்பட வேண்டும்.

இனிமேல் கட்சி கட்டமைப்பை மீறி யாரும் செயற்படக் கூடாது என்ற கட்டமைப்புக்களை உருவாக்கிய ஒவ்வொரு ஊர்களிலும் எல்லோரும் ஒன்றிணைந்து மசூறா அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கக் கூடிய நிலைமை ஏற்படுத்தி உள்ளோம்.

மக்கள் பிரதிநிதிகள், கட்சி முக்கியஸ்தர்கள், எல்லோரும் கட்சியின் ஒற்றுமையைக் கருதி ஒவ்வொரு ஊர்களிலும் தங்களுக்கான குழுக்கள் ஏற்படுத்தி கட்சியை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை முற்றாக விட்டு விட்டு கட்சியை ஒற்றுமை படுத்தி அதன் ஊடாக எது வேண்டும் என்றாலும் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலமையை ஏற்படுத்த வேண்டும்.

சில பிரதேசங்களில் கட்சி கிளைகள்புணரமைப்புக்கூட்டங்கள் நடைபெற்ற போது கட்சியின் மத்திய குழுக்கள் கட்சிக் கிளைகள் புனரமைக்கப்பட்டு மத்திய குழுக்கள்தலைவரால் நியமனம் செய்யப்பட்ட பின்னரும் மீண்டும் ஒவ்வொரு ஊர்களிலும் கட்சியின் கட்டமைப்புக்களை மீறி சிறு சிறு குழுக்களையும்,முகவர்களையும் மக்கள் பிரதிநிதிகள் உருவாக்கினால்? எமது மத்திய குழுக்களின் நிலைப்பாடு என்னவாக முடியும்?என்று கேட்டனர். நமது கட்சியின் தலைவரும்,கட்சியையும் கிராம மட்டத்தில் கட்சி கட்டமைப்புடன் செயல்படும் விடயத்தில் உறுதியாக உள்ளனர்.இதனையும் மீறி மீண்டும் ஒவ்வொரு ஊர்களிலும் கட்சி கட்டமைப்புக்களை மீறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால்.பிரதி தேசிய அமைப்பாளர் பதவி இருந்து விலகி விடுவேன் என்று தெரிவித்ததுள்ளேன். எனவே கட்சியின் நன்மை கருதி கட்டமைப்பு விடயத்தில் எல்லோரும் ஒத்தழைப்பு வழங்க வேண்டும்.

சாய்ந்தமருது பிரதேசம் முஸ்லிம் காங்கிரஸ் வரலாற்றில் பாரிய பங்களிப்பு வழங்கிய பிரதேசமாகும். நமது அருகில் அமைந்துள்ள சாய்ந்தமருது மக்களையும், வாக்குகளையும் விட்டு விட்டு அம்பாறை மாவட்டத்தில் 150,200 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பெருபான்மை மக்களின் ஊர்களுக்கு சென்று 100,200 வாக்குகளை பெற காலம்,நேரம்,பணம் என்பவற்றையும் எமது அரசியல்வாதிகள் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். சாய்ந்தமருது மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்களை நமது கட்சிக்கு இறைவன் வழங்குவான் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம்.சாய்ந்தமருது பிரதேசத்தில் கட்சியின் வளர்ச்சி தற்போது அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில் கிராம மட்ட அமைப்பாளர்கள்,இளைஞர் அமைப்பாளர்கள், மகளிர் அமைப்பாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நமது கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும்,கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபையின் உறுப்பி னருமான ஏ.எல்.அப்துல் மஜீத், முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளரும்,அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசீம், கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வரும், சாய்ந்தமருது அமைப்பாளருமான எம்.பிர்தௌஸ், முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் எம்.எம்.பசீர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

(05)

---

# நன்னடத்தை பாடசாலை மேற்பார்வையாளரான பெண்ணிற்கு மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸார ால் கைது செய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய பாடசாலையின் குறித்த மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

---

# ஆசிரியர் இடமாற்ற நடவடிக்கை மாற்றம்

(எம்.எப்.நவாஸ்)

அண்மையில் அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக புதன்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குழு வின் இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாவின் வேண்டுகோளுக்கு இணங்க , மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படும் நிலையில், மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இடை நிறுத்தி, மாவட்டத்திற்குள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக, கிழக்கு ஆளுநர் மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(05)

---

# 3 பிள்ளைகளின் தாய்க்கு வாழ்வாதார உதவிகள்



(வி.ரி.சகாதேவராஜா)

போதிய வருமானமின்றி மூன்று பெண் பிள்ளைகளுடன் நிர்க்கதியான பெண்ணுக்கு அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு வாழ்வாதார உதவியை வழங்கி வைத்தது.

கணவனின் வருமானம் இன்றி மூன்று பெண் பிள்ளைகளை வளர்த்து படிப்பிறப்பதற்காக பாரியளவில் தோட்டம் செய்வதையும் அதற்கு கிணற்றில் இருந்து கைகளால் நீர் இறைப்பதையும் அவதானித்த அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் அவதானித்து இவ் உதவியை மேற்கொண்டார்

தோட்டத்தை மேலும் அபிருத்தி செய்து வருமானத்தை ஈட்டுவதற்காக 28000.00 ரூபா பெறுமதியான நீர் பம்பி வழங்கி வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு பெண்ணுக்கு இவ் வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் அதனை பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் மற்றும் பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கி வைத்தார்.

(05)

# வவு.பாவற்குளம் அல் பாத்திமா பாலர் பாடசாலை விடுகைவிழா





வவுனியா, பாவற்குளம் அல் பாத்திமா பாலர் பாடசாலையின் விடுகைவிழா அதன் ஆசிரியை சர்மிலா பளீல் தலைமையில் கடந்த சனிக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் முன்பள்ளிகளுக்கான வலய இணைப்பாளர் மனோகரன், மதவாச்சி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சஜீத் பாத்திமா றிஸ்னா, அல் மதீனா பாடசாலையின் பிரதி அதிபர் றமீஸ், வவுனியா அல் அமீன் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் ஜலால்தீன், அல் கரீமிய்யா அரபுக்கல்லூரியின் பிரதி அதிபர் முஜாஹித் முப்தி, பாவற்குளம் பள்ளி பரிபாலனசபைத் தலைவர் றமீஸ், இணைப்பாளர் முத்து முஹம்மது, முன்பள்ளி இணைப்பாளர் லூத் மேரி, இர்சாத் மற்றும் வவுனியா நகரசபை முன்னாள் உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீப், பாவற்குளம் கிராம சேவையாளர் றம்ஸான், சூடுவெந்தபுலவு கிராம சேவையாளர் அஸ்லம், பாவற்குளம் அபிவிருத்தி உத்தியோகத்தர் நஜீம், பாவற்குளம் சமுர்த்தி உத்தியோகத்தர்களான பரீத், அர்சாத், அருள்நாயகம் உட்பட கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## அட்டாளைச்சேனை பள்ளிவாசலுக்கு கிழக்கின் கேடயத்தால் நிதி உதவி

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை அல் ஜென்னா பள்ளிவாசலின் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ். எம். சபீஸ் நிதியுதவி வழங்கியுள்ளார்.

பள்ளிவாசல் நிர்வாகத்தின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் மேற்கொண்ட கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் பள்ளிவாசலின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவதானித்தார்.

எதிர் வருகின்ற புனித நோன்பிற்கு முன்பு பள்ளிவாசலின் உட்கட்டமைப்பு நிறைவு செய்ய வேண்டுமென நிருவாகத்தினர் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைவாக எஸ் எம் சபீஸால் பள்ளிவாசல் (டைல்ஸ்) தரையை செப்பனிடுவதற்காக நிதி வழங்கப்பட்டது.

நிதி வழங்கும் நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர் எம்.பி. நஸீர், பள்ளிவாசல் பொருளாளரும் முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழு தலைவருமான எஸ்.எல்.ஏ.ஹலீம் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

## கனகர் கிராமத்தில் கார்த்திகைப் பூ கலாநிதி ஜெயசிறிலுக்கு கௌரவம்







( வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராமமக்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்கான கலாநிதி பட்டம் கிடைக்கப்பட்டமையை முன்னிட்டு பெருவரவேற்பளித்துக் கௌரவித்தனர்.

இக் கௌரவிப்பு விழா கனகர் கிராம மண மீட்புக்குழுத்தலைவி ரங்கத்தனா தலைமையிலான குழுவினரால் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன்போது பிரபல சமூக செயற்பாட்டாளர்களான எஸ்.கணேஸ், வி.ரி.சகாதேவராஜா,த. சுபோதரன் மற்றும் கே.சுசிபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கனகர் கிராமத்தில் கார்த்திகைப்பூ வழங்கி வரவேற்கப்பட்ட ஜெயசிறிலுக்கு அந்த மக்கள் பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி பாராட்டுக்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

மீள்குடியேற்றப்பட்ட பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறைபாடுகள் பற்றி எடுத்துக் கூறினர். (05)

## அம்பாறை மாவட்ட ஆசிரியர்களை சொந்த மாவட்டத்தினுள் இடமாற்றம்

### மேன்முறையீடு செய்யுமாறு மாகாணப் பணிப்பாளர் வேண்டுகோள

(பாறுக் ஷிஹான்)

வெளிமாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்ற அம்பாறை மாவட்ட ஆசிரியர்களை மாத்திரம் அவர்களின் மேன்முறையீட்டுன் பின்னர் சொந்த மாவட்டத்தினுள் இடமாற்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் பல தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

அண்மையில் அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக இன்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல தரப்பினரும் வேண்டுகோள்களை முன்வைத்தனர்.இதற்கமைய மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படும் நிலையில் மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இடைநிறுத்தி மாவட்டத்திற்குள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது என்று ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரிய இடமாற்றத்தில் உள்ள முரணபாடுகளை கண்டறிந்து குறித்த விடயத்தை சீர் செய்வதற்காக மேன் முறையீடு செய்வதற்கான கால எல்லையை நீடிக்கப்பட்டுள்ளது. அதாவது புதன்கிழமை நிறைவடைந்த முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மேன் முறையீடு செய்ய முடியும்.

அத்துடன் ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் எதிர்வரும் காலங்களில் இவ்விடயம் மேன்முறையீட்டின் அடிப்படையில் ஆராயப்பட்டு அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் மாத்திரம் சொந்த மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என எமது செய்தியாளர் பாறுக் ஷிஹானிடம் அவர் மேலும் தெரிவித்தார். மேலும் இதுவரை அம்பாறை மாவட்டத்தில் இருந்து கடந்த காலங்களில் வெளிமாவட்டத்தினுள் ஆசிரி யர்களாகக் கடமையாற்றி 5 முதல் 8 வரை வருடங்களை நிறைவு செய்த ஆசிரியர்கள் தமது சொந்த மாவட்டமான அம்பாறை மாவட்டத்தினுள் மீண்டும் இடமாற்றம் பெற்று வருவது கேள்விக்குறியாகியுள்ளதுடன் ஆசிரியர் இடமாற்றத்தில் சமநிலை தன்மை குறித்த கேள்வியும் எழுந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.(05)

## தோணி ஆற்றில் கவிழ்ந்து ஈச்சந்தீவில் இருவர் சாவு

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு பகுதிதை சேர்ந்த இருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை சிறியால் ஓடை பகுதியில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிரி ழந்தவர்கள் கிண்ணியா ஈச்சந்தீவு சின்னத் தோட்டம் பகுதியை சேர்ந்த ஆயிஸ் ரூபன் (வயது 17) ,புஷ்பகுமார் (வயது 42) எனவும் தெரியவருகிறது.

இருவரும் கடலுக்கு சென்ற நிலையில் தோணி கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர் என ஆரம்பக் கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது. 17வயதான இளைஞன் உட்பட மற்றொருவரும் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு, களனி பல்கலைகள் இடையே அறிவுசார் பரிமாற்றம்








(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் களனி பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர்களுக்கு ட்ரோன் கமரா பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு புதன்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புவியல்துறை திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பஸிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த செயலமைவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் போது களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் புவியியல் துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறி அவர்களும் பேராசிரியர் ஏ.ஜி. அமரசிங்க அவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல். பௌசுல் அமீர், கலாநிதி றபீகா அமீர்டீன் , சிரேஷ்ட விரிவுரையாளர் எம். எச். முகம்மட் றினோஸ், விரிவுரையாளர் ஐ.எல். முகம்மட் சாஹிர், விரிவுரையாளர் ஏ.எல். ஐயூப், விரிவுரையாளர் எம். என். நுஸ்கியா பானு, விரிவுரையாளர் எம். எச். பாத்திமா நுஸ்கியா உள்ளிட்டவர்களும் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம். ரீ. அஹமட் அஷ்ஹர் அவர்களும் கல்வி சாரா உத்தியோகத்தர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதுடன் பொன்னாடைகளும் போர்த்தப்பட்டன. ட்ரோன் கேமரா பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக புவியல்துறை திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் உள்ளிட்ட விரிவுரையாளர்கள் களனி பல்கலைக்கழக புவியல்துறை மாணவர்களுக்கு விரிவான செயல்முறை பயிற்சிகளையும் விரிவுரைகளையும் ஆற்றினர்.

களனி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வருகையை மகிழ்விக்க தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (05)

# வவுனியாவில் ரயில் பாதுகாப்பு கடவையில் போக்குவரத்து நடைமுறைகளில் அசமந்தம்

## அதிகரிக்கும் விபத்துக்கள்

வவுனியா ரயில் நிலைய வீதியில் காணப்படும் ரயில் பாதுகாப்பு கடவையில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றாது பயணம் செய்வதால் தினசரி விபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகே காணப்படும் ரயில் பாதுகாப்பு கடவையின் கதவுகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களை தரித்து வைத்தல், ரயில் பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தை செலுத்துதல், ரயில் கடவை திறந்தவுடன் எதிர்த்திசையில் வருகின்ற வாகனத்திற்கு வழி விடாது செல்லுதல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக ரயில் நிலைய வீதியில் தினசரி இரண்டிற்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன் சில சமயங்களில் மாத்திரமே பொலிஸார் குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் மூடப்பட்டிருந்த பாதுகாப்பான புகையிரதக் கடவையை கடந்து சென்ற ஒருவர் கிளிநொச்சியில் ரயிலுடன் மோதி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான விபத்துக்களை தடுக்க குறித்த வீதி நடைமுரைறகளை பொது மக்கள் பின்பற்ற வேண்டியது கட்டாயமானதாகும். அதனை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். (05 - 100)

# அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை நிறுவுநர் சிலை திறப்பு விழா நிகழ்வு





அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை நிறுவுநர் சிலை திறப்பு விழா நிகழ்வு புதன்கிழமை மதியம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் வித்தியாசாலை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அமரர் வி.காசிப்பிள்ளையின் சிலை வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி சிலையினை முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பரமேஸ்வரன் றசாந்தன் எனும் இளம் சிற்பி தத்ரூபமான முறையில் வடிவமைத்துள்ளார்.

வவுணியா பல்கலைக்கழக வேந்தரும், பாடசாலையின் பழைய மாணவர் சங்க தலைவருமான பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தாம்போதி நிர்மாணம் தொடர்பாக ஆராய செயலாளர் நேரடி பயணம்







(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வீரமுனை அலவாக்கரை வீதியில் உள்ள இரண்டு தாம்போதிகளின் நிர்மாணம் குறித்து ஆராய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரத்தினம் நேரடி விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது குறித்த இரண்டு தாம்போதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேளையில் பூர்த்தி செய்யப் படாதமை குறித்து ஆராய்ந்தார்.

இதனைப் பார்வையிட்டு குறித்த ஒப்பந்தக்காரர் இதை ஒருவார காலத்தில் முடிவுறுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

முன்னதாக அவர் கல்முனை பிராந்திய வீதிஅபிவிருத்திதிணைக்கள அலுவலகத்திற்கு கன்னி விஜயத்தை மேற்கொண்டார். கல்முனை பிராந்திய வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி எம்.எம்.முனாஸ் செயலாளரை மாலைசூட்டி வரவேற்றார். அலுவலகத்தில் பணிகள் பற்றி ஆராயப்பட்டது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு மாவட்டத்தின் 2024ஆம் ஆண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டிற்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 9953.11 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட 1162 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 287 மில்லியன் செலவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

மேலும் கரையோரம் மற்றும் வாவியை அண்டிய பகுதிகளில் கண்டல் தாவரங்களை நடுதல், மட்டக்களப்பு வாவியில் மிதக்கும் உல்லாசப் படகு சேவையை ஆரம்பித்தல், வவுணதீவுப் பிரதேசத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்தல், புளுக்குணாவ குளத்தில் மீன்குஞ்சு வளர்ப்பை ஆரம்பித்தல் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

இதுதவிர தனியார் கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படும் மேலதிக வகுப்புகளில் தரம் 10 தொடக்கம் க.பொ.த உயர்தரம் தவிர்ந்த ஏனைய அனைத்து வகுப்புகளையும் ஞாயிற்றுக் கிழமைகளில் தடை செய்வது தொடர்பான விசேட கூட்டம் ஒன்றை நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டதுடன் இம்மாவட்டத்தில் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் மதுவிற்பனை தொடர்பாக கலால் திணைக்களம், பொலிசாருடன் இணைந்து உரிய சட்ட நடவடிக்கை மேற கொள்வது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுக்கான இழப்பீடுகளை மீள்பரிசீலனை செய்து அதற்கான இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கவும், பொதுமக்கள் மின்சாரக்கட்டணம் செலுத்தத் தாமதமாவதால் ஏற்படும் மின் துண்டிப்புச் சலுகைக் காலத்தை நீடிப்பது தொடர்பாக மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு கோரிக்கை விடுப்பதெனவும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றில் பிரதேச மட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இங்கு ஆராயப்பட்டன. மேலும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் சார்பாக முன்வைத்த பல விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டதுடன் இவற்றில் மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்படவேண்டிய விடயங்களுக்கான தீர்வுகள் எட்டப்பட்டதுடன் தேசிய மட்டத்தில் பேசப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணை தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ்வியாழேந்திரன் மற்றும் ஏ.எல்எம்.அதாவுல்லா மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், அலிசாஹிர் மௌலானா, மாவட்ட செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்கள், அதிகாரிகள் என பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

(05)

## தேசிய கீதம், தேசிய கொடிக்கான முக்கியத்துவம் மன, உடல் ரீதியாக இருப்பது அவசியமான ஒன்று

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுரை

தேசிய கீதம் பாடப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாணவர்கள் அதன் மீது அதிகளவான கவனத்தையும் மரியாதையையும் செலுத்துவது அவசியம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அச்சுவேலி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் மற்றும் பாடசாலை சீருடைத் துணிகள் பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பிரதம அதிதியாக உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுவாக அரசியலோ , பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகளின் மனோநிலையிலிருந்து நான் முற்றிலும் வேறுபட்டவராகவே இருக்கின்றேன்.

இதேநேரம் எமது வடக்கு மாகாணத்தின் கல்வி செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் கல்விசார் அதிகாரிகள் அதிகளவான ஊக்குவிப்புகளை வழங்கிவருகின்றனர்.

ஆனாலும் நான் அறிகின்ற வகையில் உயரதிகாரிகளின் இந்த முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை எனத் தெரியவருகின்றது. இந்த நிலை இல்லாது போக வேண்டும். அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் நான் கவனத்தில் எடுத்து கொள்வதுடன் வடக்கின் கல்வி தரத்தை மேலும் வலுப்படுத்த என்னாலான முழுமையான ஒத்துழைப்புகளையும் எந்த வேளையிலும் வழங்கத் தயாராகவே இருக்கின்றேன்.

மேலும் பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமை தான் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது , இனிவருங்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். - என்றார். (05)

## முன்னால் திரும்பிய மோட்டார் சைக்கிளை முட்டி தள்ளி வீதியை விட்டு விலகி காணிக்குள் புகுந்தது அரச பேருந்து



யாழ்ப்பாணம் தென்மராட்சி - ஏ. 9 வீதி, நாவற்குழி பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) பிற்பகல் 4.15 மணியளவில் இடம்பெற்றது.

ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் திரும்ப முற்பட்டபோது பின்னால் பயணித்த அரச பஸ் அதனை முட்டி தள்ளியதோடு பாதையை விட்டு விலகி காணிக்குள் புகுந்துள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிளுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அதில் பயணித்த இருவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (05)

## சாய்ந்தமருது இளம் தொழிலதிபர் நீதிக்கான மையத்தால் கௌரவிப்பு



(எஸ்.அஷ்ரப்கான்)

இந்தியா, திருச்சியில் சிறந்த வர்த்தக முகாமைத்துவ பணிப்பாளர்களுக்கான ஆசிய விருது - 2023, பெற்ற நீதிககான மைய்யத்தின் பொருளாளர், இளம் தொழிலதிபர் அப்துல் அஸீஸ் அஷ்ரஃப் அலி நீதிக்கான மைய்யத்தால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு நீதிக்கான மையயத்தின் தலைவர சட்டமுதுமாணி ஷஃபி எச். இஸ்மாயில் தலைமையில் சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் நீதிக்கான மைய்யத்தின் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான் உள்ளிட்ட நீதிக்கான மையத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆசிய விருது பெற்ற இளம் தொழிலதிபர் அப்துல் அஸீஸ் அஷ்ரஃப் அலி நீதிக்கான மையத்தின் பிரதிநிதிகளால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கிகௌரவிக்கப்பட்டார். (05)

## எழுவர் கொண்ட குழு வீட்டுக்குள் பலவந்தமாக நுழைந்து தாக்குதல் மேற்கொண்டு கொள்ளை

கெஸ்பேவ பொலிஸ் பிரிவுககுப்பட்ட சித்தமுல்ல பிரதேச வீடு ஒன்றுக்குள் பலவந்தமாக நுழைந்து, குடியிருப்பாளர்களையும் சொத்துக்களையும் தாக்கிச் சேதப்படுத்தி 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்த ஏழு பேர் கொண்ட குழுவொன்றை கைது செய்துள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் கொள்ளையர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கார் மற்றும் ஓட்டோ என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்களின் தாக்குதல் காரணமாக சொத்துக்களுக்கு பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (05)

## நயினாதீவில் கஞ்சா மீட்பு



நயினாதீவில் 20 கிலோ மற்றும் 140 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

நயினாதீவு கடற்கரையில் கஞ்சா இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு கடற்படையுடன் இணைந்து விரைந்த விசேட அதிரடிப் படையினர் 20 கிலோ கிராம் மற்றும் 140 கிராம் கஞ்சாவை கைப்பற்றினர்.

இதனையடுத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (05)



## லொறி – ஓட்டோ மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

குளியாப்பிட்டி - உடுபத்த பிரதேசங்களுக்கு இடையில் பல்லேவெல பகுதியில் இயந்திர கோளாறு காரணமாக வான் ஒன்று லொறியின் உதவியுடன் இழுத்துச்செல்லப்பட்ட நிலையில் குறித்த லொறியானது ஓட்டோவுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை இந்தச் இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த தம்பதியினர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வானை இழுத்துச்சென்ற லொறி சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (05)

# வன்புணர்வில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலருக்கு நுவரெலியா நீதிமன்று 7 வருட கடூழியல் சிறை

## ரூ. 5 லட்சம் இழப்பீடு செலுத்தவும் தீர்ப்பு

திருமணம் ஆகாத 35 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குப்படுத்திய பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குற்றவாளி 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவேண்டும் னறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கினார். வழக்கு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தராக கடமையாற்றிய லக்க்ஷமன் சாலிய பண்டார வீரசிங்க கடமை நேரத்தில் 35 வயதுடைய திருமணமாகாத பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு விசாரணைகளில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு எதிராக 2019 ஆண்டு நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 லட்சம் ரூபாய் அபராத தொகை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருட சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1500 போதை மாத்திரைகள் சுற்றிவளைப்பில் மாட்டின

## மன்னாரில் சந்தேகநபர்கள் இருவர் கைது

இலங்கை கடற்படை, மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து நேற்று செவ்வாய்கிழமை முன்னெடுத்த சுற்றிவளைப்பில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 1,472 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்தது.

சந்தேகநபர்களால் பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது. மன்னார், உப்புக்குளம் பிரதேசத்தில் வைத்தே சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து சிறிய எண்ணிக்கையிலான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. பின்னர் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமை உப்புக்குளம் பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து எஞ்சிய 1,432 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்தது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 28 மற்றும் 29 வயதுகளையுடைய சிலாவத்துறை மற்றும் மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக போதை மாத்திரைகளுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த மேலும் 6 சிரேஷ்ட மாணவர்கள் கைது

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீட மாணவி ஒருவரையும் மேலும் இரு மாணவர்களையும் தாக்கிய சம்பவம் தொடர்பில் மேலும் 6 சிரேஷ்ட மாணவர்களை சமனலவெவ பொலிஸார் இன்று புதன்கிழமை (14) கைது செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி இரவு உணவகத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும், இதன்போது ஒரு மாணவி மற்றும் இரண்டு மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சமனலவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 7 சிரேஷ்ட மாணவர்கள் முன்னர் கைது செய்யப்பட்டு பலாங்கொடை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆறு சிரேஷ்ட மாணவர்களும் சமனலவெவ பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஆரம்ப பாடசாலை சிறுவர்கள் 18 பேருக்குத் திடீர் சுகயீனம்

வெல்லவாய, மல்வத்தாவல பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 18 மாணவர்கள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு திடீர் சுகயீனமடைந்துள்ளனர்.

18 மாணவர்கள் தோல் அரிப்பு மற்றும் உடலில் தழும்புகள் ஏற்பட்டு சுகயீனமடைந்துள்ளனர்.

இதனையடுத்து சுயீனமடைந்த மாணவர்கள் வெல்லவாய ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லை என வெல்லவாய ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# கிராம அலுவலர் நேர்முகத் தேர்வு அடுத்த வாரம்

புதிய கிராம சேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, புதிதாக 2,100 கிராம சேவையாளர்களை கடமையில் இணைத்துக்கொள்ள திட்ட மிடப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான போட்டிப் பரீட்சை அண்மையில் நடைபெற்றதாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த குறிப்பிட்டுள்ளார் .

இதில் பங்கு பற்றியவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் .






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2024இல் வெளியிடப்பெற்றது.